Royal Commission into Victoria's Mental Health System

# விக்டோரியாவின் மனநல அமைப்பு குறித்த ராயல் கமிஷன்

விக்டோரியாவின் மனநல அமைப்பை மாற்றக்கூடிய தெளிவான செயல்பாடுகளை வழங்குவதும் விக்டோரியன்களுக்கு சிறந்த மனநலத்தை அளிப்பதும் ராயல் கமிஷனின் இலக்காகும்.

எங்களின் கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளை மேம்படுத்த, நாங்கள் விக்டோரியன் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். மேலும், எங்களின் மனநல அமைப்பை மேம்படுத்துவதற்கு உதவ, உங்களின் அனுபவங்கள், கருத்துகள் மற்றும் எண்ணங்களைப் பகிருமாறு உங்களிடம் கேட்கிறோம்.

உங்களின் பங்களிப்புகளை எழுத்துப்பூர்வமான அறிக்கைகள், படங்கள், ஆடியோ அல்லது வீடியோ உள்ளடக்கமாக நீங்கள் பகிர்வதற்கென ஆன்லைன் போர்ட்டலைக் கொண்டுள்ளோம்.

தனிநபர் அல்லது நிகழ்வுகளை ஆய்வு செய்வதைக் காட்டிலும் அமைப்பு முழுவதுமான பிரச்சனைகளைக் கண்டறிந்து, தீர்ப்பதில் இந்தக் கமிஷன் முக்கியத்துவம் அளிக்கிறது.

இவ்வாறு உங்களின் பங்களிப்பை வழங்கலாம்:

- உங்களுக்கு மொழிபெயர்ப்புச் சேவை (பொது விடுமுறை அல்லாத நாட்களில், திங்கள் முதல் வெள்ளி வரை: *9am-5pm.)* தேவையெனில், 1800 00 11 34 அல்லது 03 7005 3010 ஐ அழைத்தல்
- எழுதுதல்: அஞ்சல்பெட்டி 12079, ஏ பெக்கட் செயின்ட், விக்டோரியா 8006 (உங்களின் கடிதத்தை மொழிபெயர்ப்போம்)
- ஆன்லைனில் சமர்ப்பிப்பை நிறைவுசெய்தல்: https://rcvmhs.vic.gov.au/submissions
- மின்னஞ்சல்: contact@rcvmhs.vic.gov.au

மனநலச் சேவை வழங்குநர் குறித்த குறைகள் உங்களிடம் தற்போது இருப்பின் ராயல் கமிஷன் தனிநபர் புகார்கள் அல்லது குறைகளைத் தீர்க்காது. விக்டோரியன் பொதுமக்கள் மனநலச் சேவைகளுடான உங்களின் அனுபவம் குறித்து ஏதேனும் குறைகள் இருப்பின், நேரடியாகச் சேவையைத் தொடர்புகொள்ளலாம் அல்லது மனநலப் புகார்கள் ஆணையரிடம் *(MHCC)* பேசவும்.

*MHCC* என்பது சுதந்திரமான, சிறப்பு அமைப்பாகும். இது உரிமைகளைப் பாதுகாத்து, பொதுமக்கள் மனநலச் சேவைகள் குறித்த புகார்களைத் தீர்க்கிறது. நீங்கள் *1800 246 054* எனும் எண்ணில் அழைத்தோ help@mhcc.vic.gov.au எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பியோ *MHCC* ஐத் தொடர்புகொள்ளலாம். கூடுதல் தகவலுக்கு, www.mhcc.vic.gov.au ஐயும் பார்வையிடவும்.

**பதிவுசெய்த மருத்துவர் குறித்து குறை இருப்பின்**

பதிவுசெய்த மருத்துவரின் (பதிவுசெய்த மனநல மருத்துவர், மனோதத்துவ நிபுணர், மருத்துவர்) நடத்தை அல்லது செயல்பாடு குறித்து குறை இருப்பின், ஆஸ்திரேலிய மருத்துவர் ஒழுங்குமுறை ஏஜென்சியைத் (AHPRA) தொடர்புகொள்ளவும். 1300 419 495 எனும் எண்ணில் அழைத்தோ www.ahpra.gov.au எனும் தளத்திலோ, AHPRA ஐத் தொடர்புகொள்ளவும்.

**பிற நலச் சேவைகள் குறித்து குறை இருப்பின்**

நலப் புகார்கள் ஆணையர் (HCC) என்பது விக்டோரியாவின் நலச் சேவைகள் மற்றும் நலத் தகவல் தொடர்பான பிரச்சனைகள் குறித்த சுதந்திரமான மற்றும் நடுநிலையான அமைப்பாகும். HCC தனிநபர் மன நலச் சேவைகள் அல்லது வழங்குநர்கள் குறித்த புகார்களைப் பெறக் கூடியது. 1300 582 113 எனும் எண்ணில் அழைத்தோ www.hcc.vic.gov.au எனும் தளத்திலோ HCC ஐத் தொடர்பு கொள்ளவும்.